**வாக்குமூலம்**

**முதலாவது கூடுதல் மாவட்ட மற்றும் அமர்வு நீதிமன்றம், திருவள்ளூர்**

| | | |
|---|---|---|
| வழக்கு எண; | : | SC 59/2024 |
| வழக்கு சாட்சி | : | PW1 |
| நாள் | : | 16.10.2025 |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | ஆறுமுகம் | ஜாதி | : | |
| தந்தை– பெயர் | : | சுப்பிரமணி | தொழில் | : | |
| கிராமம் | : | | சமயம் | : | |
| தாலுக்கா | : | | வயது | : | |

1ம் எதிரி ஆஜரில்லை. மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. மற்ற எதிரிகள் ஆஜர்.

**முதல் விசாரணை :**

நான் ஆர்.கே. பேட் அருகில் உள்ள சுந்தரராஜாபுரம் கிராமத்தில் வசித்து வருகிறேன். நான் விவசாய கூலி வேலை செய்து வருகிறேன். இறந்த யுவராஜ் என்பவர் என்னுடைய மூத்த மகன். ஆஜர் எதிரிகளை தெரியும். 1ம் எதிரி காயத்திரி என் சகோதரிரியன் மகள் மற்றும் என்னுடைய மருமகள் ஆவார். எனக்கு இரண்டு மகன், ஒரு மகள் உள்ளார்கள். இறந்த யுவராஜ் மூத்த மகன் ஆவார். என்னுடைய மூத்த மகன் ஸ்ரீபெரும்பத்துரில் உள்ள தனியார் நிறுவனத்தில் வேலை செய்து வந்தார். என்னுடைய சகோதரியின் மகள் காயத்திரி ராமசந்திர மருத்துவமனையில் சேவலியராக பணிபுரிந்து வந்தார். அவர் வேலையை நிறுத்திவிட்டு என் மகனை திருமணம் செய்து கொண்டார். திருமணம் முடிந்து சில நாட்கள் வீட்டில் இருந்தார், அதன் பிறகு திருத்தணியில் உள்ள Peakock மருத்துவமனையில் சேவலியராக பணிபுரிந்து வந்தார். என்னுடைய மருமகள் யாருடனோ செல்போனில் பேசிக்கொண்டிருப்பார், அதனால் அவருக்கும் என் மகனுக்கு அடிக்அடி தகறாரு நடக்கும். எங்கள் கிராமத்தில்ல என் மகள், மற்றும் எனது தங்கை வீடு அருகருகே இருந்ததால் 19.02.2023ம் தேதி இரவு சுமார் 9.00 முதல் 10.00 வரை என் மகள் வீட்டு அருகே நானும், என் பெரிய மகன், எனது மனைவி ஆகியோரும்

பேசிக்கொண்டிந்தோம். அதன் பிறகு என் மகன் நான் படுக்க செல்கிறேன் என கூறிவிட்டு அவர் எனது தங்கை வீட்டில் படுக்க சென்றார். எனது மகன் எனது தங்கை வீட்டிலேயே வசித்து வந்தார். அன்று இரவு சுமார் 11.00 மணிக்கு எங்கள் கிராமத்தை சேர்ந்த ஆனந்தன், தங்கராஜ் என்பவர் கழனிக்கு போகும் போது என் தங்கை வீட்டு அருகே பெரிய ஸ்கூட்டர் ஒன்றும், சிறிய ஸ்கூட்டர் ஒன்று நிற்பதாக என்னிடம் கூறினார். நானும், எனது சிறிய மகனும் என்னுடைய தங்கை வீட்டிற்கு சென்று பார்த்தோம். அருகில் வரும் போது மூன்று நபர்கள் அந்த வண்டியை எடுத்துக்கொண்டு போய்விட்டார்கள். நான் எனது தங்கை வீட்டை பார்த்த போது வீடு பூட்டு இருந்ததால் நாங்கள் வீட்டிற்கு சென்று படுக்க சென்றுவிட்டோம். காலையில் 4.00 மணிக்கு எனது அம்மா சுசிலா, எனது பெரிய மகனை எழுப்பிய போது அவருக்கு மூச்சு பேச்சு இல்லாமல் இருப்பதை கண்டு அவர் கத்திக்கொண்டே என் வீட்டிற்கு ஓடி வந்தார். நானும், எனது மகன், மகள், எனது மனைவி ஆகியோர் எனது தங்கை வீட்டிற்கு சென்று எனது மகனை பார்த்தோம், அவர் அழுத்தி பார்த்தோம், அவரை துக்கிகொண்டு வீட்டிற்கு வெளியே உள்ள திண்ணையில் படுக்கவைத்த பார்த்த போது கழுத்தின் இரு பக்கத்திலும் நக கீரல்கள், மார்பில் நக கீரல்கள் மற்றும் மார்பில் ரத்தம் கட்டிய நிலையிலும், இரண்டு தொடைகளில் நக கீரல்கள் மற்றும் ரத்த கட்டிய நிலையில் காணப்பட்டது. கீழ் உதடு கீழிந்த நிலையில் காணப்பட்டது. என் மருமகளை இது சம்மந்தமாக கேட்ட போது எலி மருந்தை குடித்துவிட்டார். பிளைடால் கையை கிழித்து கொண்டார். 20.02.2023ம் தேதி காலை 8.00 மணிக்கு ஆர்.கே.பேட் காவல் நிலையத்தில் புகார் கொடுத்தோம். தற்போது என்னிடம் காண்பிக்கப்படும் புகார் தான் **அ.த.சா.ஆ.1** ஆகும். 21.02.2023ம் அன்று போலிசார் காயத்திரி, சீனிவாசன், மணிகண்டன் மற்றும் நபருடன் என் தங்கை வீட்டுக்கு அழைத்து வந்து எப்படி எவ்வாறு கொலை செய்தார்கள் என கேட்ட போது. அதில் ஒரு நபர் கையை பிடித்துக்கொண்டதாகவும், ஒருவர் கழுத்தை பிடித்து நெருக்கியதாகவும், எனது மருமகள் தலையணை வைத்து அழுத்தியதாகவும் நடத்தி காண்பித்தார்கள். என் மகன் இறந்த போது 2 வயது

பெண் குழந்தை இருந்தது. அதன் பிறகு காவல் நிலையம் சென்று இரண்டு இரசக்கர வாகனத்தை அடையாளம் காட்டினேன். இது சம்மந்தமாக போலிசார் என்னை விசாரணை செய்தார்கள். நடந்ததை சொன்னேன்.

**<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை :</u>**

சுந்தரராஜாபுரத்தில் உள்ள விநாயகர் தெருவில் நான் வசித்து வருகிறேன். அந்த தெருவில் சுமார் 100 வீடுகள் உள்ளன. ஆர்.கே.பேட் காவல் நிலையிலிருந்து மேற்கு செல்லும் ரோடு சுந்தரராஜாபுரத்திற்கு செல்கிறது என்றால் சரிதான். அவ்வாறு செல்லும் போது அந்த ரோட்டின் இடது புறத்தில் என் தங்கை  வீடு உள்ளது. என் தங்கை அமராவதி வீட்டிற்கு முன்னால் ஒரு மண் ரோடு உள்ளது என்றால் சரிதான். அந்த மண் ரோட்டில் சென்றால் சுமார் 20 மீட்டர் தொலைவில் என் மகள் யமுனா வீடு உள்ளது. யமுனா வீடு என் தங்கை வீட்டிற்கு பின் பக்கம் உள்ளது என்றால் சரிதான். தங்கை வீட்டிற்கு மேற்கு புறத்தில் ஜெய்சங்கர் வீடு உள்ளது என்றால் சரிதான். ஜெய்சங்கர் வீடு தாண்டியும் அதே திசையில் ஒரு பள்ளிக்கூடம் உள்ளது என்றால் சரிதான். அந்த பள்ளிக்கூடம் தாண்டி வலது பக்கமாக ஒரு வலைவு உள்ளது என்றால் சரிதான். அதை தாண்டி நேராக அந்த சாலை செல்லும் என்றால் சரிதான். அந்த தெருவில் 6, 7 வீடுகள் தள்ளி தான் என் வீடு உள்ளது என்றால் சரிதான். என் வீட்டிற்கு நேர் எதிர் ஆனந்த் வீடு உள்ளது. அவரும் இன்று நீதிமன்றத்திற்கு என்னுடன் வந்துள்ளார். நான் என் வீட்டிலிருந்து பார்க்கும் போது என் தங்கை வீடு தெரியாது என்றால் சரிதான். என் தங்கை வீடுக்கு பின்னால் உள்ள யமுனா வீடு தெரியாது என்றால் சரிதான். என் வீடும், என் தங்கை வீடு சுமார் 500 மீட்டர் துரம் தான் உள்ளது. எனது இரண்டாவது மகன் அருண்குமார் திருமணம் ஆகி என்னுடன் தான் வசித்து வருகிறார். அவரும் தற்போது என்னுடன் நீதிமன்றத்திற்கு வந்துள்ளார். அருண்குமார் திருமணம் ஆகி எங்கள் வீட்டில் பக்கத்திலேயே உள்ளார். என் மகன் யுவராஜ் திருமணத்திற்கு முன்பு 3 சிப்ட் பணிக்கு செல்வார். 3 சிப்ட் எந்த எந்த நேரம் என்பது எனக்கு தெரியாது. இரவு சிப்ட் என்றால் மதியம் 12.00 மணிக்கு சென்று இரவில் 1.00 மணிக்கு வருவார்.

யுவராஜ் திருமணத்திற்கு பின்பும் வேலைக்கு சென்று வந்தார். அவருக்கு மது அருந்தும் பழக்கம் உள்ளதா என்றால் இல்லை. திருமணத்திற்கு பிறகு யுவராஜ் என்னுடைய தங்கை வீட்டிலிருந்து வேலைக்கு சென்று வந்த விபரம் எனக்கு தெரியும். காயத்திரி என் தங்கைக்கு ஒரே மகள், அவருடன் உடன் பிறந்தவர்கள் வேறு யாரும் இல்லை. காயத்திரி என் மகனை திருமணம் செய்த பிறகு வேலைக்கு செல்லவில்லை. என் மகன் திருமணம் ஆன பின்பு என் வீட்டிற்கு அடிக்அடி வருவார். அப்படி வரும் போது எனது மருமகள் போன் பேசுவது தொடர்பாக என்னிடம் சொல்வார். இது தொடர்பாக அவர்களுக்கு பிரச்சனை ஏற்பட்டு காவல் நிலையத்தில் எந்த புகாரும் கொடுக்கவில்லை. என் மருமகள் ஒரு ஆண் நபரிடம் பேசுவதாக தான் சொல்வார்கள். இது சம்மந்தமாக என் தங்கை அமராவதி சொல்லியும் அவர் கேட்கவில்லை. இந்த விபரம் என் தங்கைவீட்டிற்கு பின்னால் இருக்கும் என் மகள் யமுனாவிற்கு தெரியாது. திருமணம் ஆன பிறகு எனது மகன் யுவராஜ்–ம், காயத்திரியும் குழந்தை பிறக்கும் வரை சந்தோஷமாக தான் வாழ்ந்து வந்தார்கள். என் மகன், காயத்திரி வீட்டிலிருந்து இரண்டு சிப்ட் தான் பணிக்கு சென்றார் என்றால் அவர் 3 சிப்ட்–க்கு பணிக்கு செல்வார். காலையில் சிப்ட் 5.30 மணி முதல் மாலை 8.00 மணிக்கும், 2வது சிப்ட் காலை 11.00 சென்று இரவு 2.00 மணிக்கு வருவார். வாரத்தில் அவர் 6 நாட்கள் அவர் பணிக்கு செல்வார். 19.02.2023ம் அன்று அவர் பணிக்கு சென்றார் என்று சொன்னால் அன்றைய தினம் ஞாயிற்று கிழமை என்பதால் அவர் பணிக்கு செல்லவில்லை. 19ம் தேதிக்கு முன்னால் சிவராத்திரி என்றால் அதை பற்றி தெரியாது. சம்பவம் நடப்பதற்கு முன்பு என் மகன் வீடு கட்ட ஆரம்பித்தார் என்று சொன்னால் சரிதான். திருமணம் ஆன பிறகு அவர் சில மனக்கசப்பு ஏற்பட்டதால் அவர் தனியாக வீடு கட்டியது என்று சொன்னால் அவர்களுக்கு போன் சம்மந்தமாக பிரச்சனை இருந்து வந்ததால் தனியாக வீடு கட்டினார். வீடு கட்டுவதற்கு என் தங்கை பணம் உதவி செய்தாரா என்றால் அவர் எதுவும் செய்யவில்லை. என் மகன் கடக்கால் போடும் போது நான் என் மனைவி, என் இளைய மனைவி, மற்றும் ஜமுனா ஆகியோர் சென்றோம். என்

தங்கை வீட்டிற்கு பின்னால் வசிக்கும் யமுனா அவர்களுக்கு போன் பேசுவது சம்மந்தமாக தகராறு ஏற்படும் என்று என்னிடம் சொல்வார். 19.02.2023ம் அன்று நான் என் மகள் வீட்டில் பேசிக்கொண்டிருந்து என் மகன் அருண்குமார் அங்கு இல்லை என்றால் சரிதான். நான் பொதுவாக 8.30 முதல் 9.00 அல்லது 10.00 மணிக்கு படுக்கும் பழக்கம் உள்ளது. அன்றைய தினம் நான் என் மகள் வீட்டில் பேசிக்கொண்டிருந்த போது என் மருமகன் குமார் அங்கு இல்லை. நான் போலிஸ் விசாரணையில் குறிப்பாக என் மனைவி இருந்தார் என்று சொல்லவில்லை. பொதுவாக நாங்கள் இருந்தோம் என்று சொன்னேன். அன்றைய தினம் சுமார் 10.00 மணி அளவில் என் மகள் வீட்டிலிருந்து என் வீட்டிற்கு சென்றுவிட்டோம். என் மகன் யுவராஜ் என்னுடன் தான் இருந்தார். நான் வீட்டிற்கு சென்றபோது நான் தங்கராஜ் மற்றும் ஆனந்தன் நான் பார்க்கவில்லை. தங்கராஜ் மற்றும் ஆனந்தன் ஆகியோர்களை மறுநாள் காலை 11.00 மணிக்கு நான் தங்கை வீட்டில் பார்த்தேன் என்று சொன்னால் சரியல்ல. அன்று இரவு 11.00 மணிக்கு அவர்களை பார்த்தேன். சம்பவம் அன்று நான் என் மகள் யமுனா வீட்டிலிருந்து இரவு 10.00 க்கு சென்று என் வீட்டில் படுத்துவிட்டேன். என் மனைவியும் என் வீட்டில் தான் இருந்தார். நாங்கள் இருவரும் தான் என் மகள் வீட்டிற்கு சென்று வந்தோம். நான் செல்லும் போது என் மகன் அருண்குமார் அவருடைய வீட்டில் படுத்து இருந்தார். காலை 4.00 மணி அளவில் தான் யுவராஜ் பேச்சு, முச்சு இல்லாமல் இருந்த விபரம் தெரியும். என் அம்மா வந்து என்னை அழைத்ததன் பேரில் தான் இந்த விபரம் தெரிய வந்தது. நான், என் மனைவி, மகன் ஆகியோர் சென்றோம். அங்கு நான் சென்ற போது என் தங்கை மற்றும் இரண்டு, மூன்று நபர்கள் இருந்தார்கள். என் தங்கை வீட்டிற்குள் சென்று பெட் ரூமில் பார்த்தோம். என் தங்கை வீட்டிற்குள் வலபுறம் ஒரு அறையும், இடது புறம் அறையும் இருக்கும் என்றால் சரிதான். அதை தாண்டி சென்றால் வீட்டிற்கு வெளியே ஒரு சமயல் செய்யும் கொட்டகை உள்ளது சரிதான். அந்த கொட்டகையில் என் தங்கை படுத்து உறங்குவார் என்றால் சரியல்ல. வாசல் உள்ளே நுழையும் போது அந்த படியில் அருகே தான்

என் தயார் உறங்குவார் என்றால் சரிதான். நான் உள்ளே சென்று பார்த்த போது இடதுபுற அறையில் உள்ளார். அப்போது காயத்திரி வீட்டிற்கு வெளியே வசலில் தண்ணீர் தெளித்து கொண்டிருந்தார். ஆனந்தன் மற்றும் தங்கராசு இரண்டு பைக் நிற்பாக என்னிடம் சொன்னார் என்று இந்த வழக்கிற்காக சொல்கிறேன் என்றால் சரியல்ல. அந்த வண்டியின் பதிவு எண் மற்றும் கலர் எனக்கு தெரியாது. இந்த விபரம் அவர்கள் இருவர் தவிர வேறு யாரும் பார்த்து என்னிடம் சொல்லவில்லை. அந்த மூன்று நபர்களின் அங்க அடையாளங்கள் என்னிடம் சொல்லவில்லை. மூன்று நபர்கள் என் தங்கை வீட்டிற்குள் சென்றார்கள் என்று ஆனந்தன் மற்றும் தங்கராஜ் என்னிடம் சொல்லவில்லை. நான் தான் யுவராஜ்–ன் உடலை எடுத்து வந்தேன். நான் என் மகனின் உடல் அருகே மூடி கழிட்டிய பிராந்தி பாட்டிலை பார்த்தேன். அன்று இரவு என் மகன் குடித்திருந்தாரா என்றால் அவர் குடிக்கவில்லை. நான் உடனடியாக போலிசுக்கு போன் செய்தேன். போலிசார் சுமார் 7.00 அளவில் வந்தார்கள். எங்கள் ஊரிலிருந்து காவல் நிலையம் சுமார் 4 KM தொலைவில் உள்ளது. இரண்டு போலிசார்கள் தான் வந்தார்கள். போலிசார் அங்கு வந்து விசாரித்தார்கள். போலிசார் என்னை விசாணை செய்யும் போது என்ன நடந்தது என்று எனக்கு தெரியாது என்று சொன்னேன் என்றால் சரியல்ல. போலிசா்ர என் தங்கையை விசாரணை செய்தார்கள். அன்று 9.00 மணிக்கு மேல் தான் போலிஸ் உயர் அதிகாரிகள் வந்தார்கள். புகாரை காவல் நிலையத்தில் தான் கொடுத்தேன். உயர் அதிகாரிகள் யார் யாரை விசாரித்தார்கள் என்ற விபரம் எனக்கு தெரியாது. எனக்கு எழுத படிக்க தெரியாது. கையெழுத்து மட்டும் தான் போடுவேன். நான் காவல் நிலையத்தில் புகார் கொடுக்கும் போது எங்கள் ஊர் நபர்கள் இருந்தார்கள். என் இளைய மகன் அருண்குமாரும் அப்போது உடன் இருந்தார். அவருக்கு எழுதப்படிக்க தெரியும். நான் புகார் கொடுக்கும் போது என் மருமகள் காயத்திரி வரவில்லை. அப்போது அவர் வீட்டில் தான் இருந்தார். நாங்கள் காயத்திரியை டார்ச்சர் செய்ததால் தான் கையை அறுத்துக்கொண்டார் என்றால் சரியல்ல. காயத்திரி கையை அறுத்துக்கொண்டு மருத்துவனைக்கு சிகிச்சைக்கு சென்றார்

என்றால் சரிதான். காயத்திரியை காவல் நிலையத்திற்கு வரவேண்டாம் என்று சொன்னதால் தான் அவர் கையை அறுத்துக்கொண்டு மருத்துவமனைக்கு சென்றுவிட்டார் என்றால் சரியல்ல. புகாரை நான் சொல்ல சொல்ல காவல் நிலைய பக்கத்தில் ஒருவர் தட்டச்சு செய்து கொடுத்தார். புகாரில் காயத்திரி தான் என் மகனின் இறப்பிற்கு காரணம் என்று குறிப்பிட்டு சொல்லவில்லை. புகார் கொடுத்த பிறகு போலிசார் என்னை மறுபடியும் விசாரணை செய்தார்கள். புகாரில் எதிரிகளின் அங்க அடையாளங்கள் குறிப்பிடவில்லை என்றால் சரிதான். புகார் கொடுத்த பின்பு போலிசார் வீட்டிற்கு வந்து என்னை மறுபடியும் விசாரணை செய்யவில்லை. 21.02.2023ம் தேதி 2, 3 எதிரிகளை நேரில் காண்பித்து தான் போலிசார் காவல் நிலையத்தில் விசாரணை செய்தார்கள். அப்போது என்னுடன் ஊர் இருந்தார்கள். என்னை மட்டும் உள்ளே அழைத்து காண்பித்தார்கள். விசாரணை செய்யும் போது ஆனந்தன், மற்றும் தங்கராஜ் காவல் நிலையத்தில் வெளியே தான் இருந்தார்கள். வழக்கு சம்மந்தாக என் மருமகள் காயத்திரியை போலிசார் விசாரணை செய்தார்கள். காயத்திரி என் விபரம் சொன்னார் என்ற விபரம் தெரியாது. என் மனைவி, மற்றும் என் மகள், சகோதரிகளை ஆகியோர்களை போலிசார் விசாரணை செய்தார்கள். என்னை விசாரணை செய்யும் போது ஒரு சின்ன ஸ்கூட்டி, ஒரு பெரிய ஸ்கூட்டி காவல் நிலையத்தில் தான் இருந்தது. என்னை போலிஸ் விசாரணை செய்யும் போது நானும், என் மகன் யுவராஜ், சம்பவம் அன்று பேசிக்கொண்டிருந்தோம் என்று சொல்லவில்லை என்றால் சரியல்ல. நான் சொல்லாமல் போலிசார் அவ்வாறு எழுதிக்கொண்டார்கள் என்றால் சரியல்ல. என் மகன் குடிபழக்கம் அதிகமாக இருப்பதால் அவருக்கும், என் தங்கைக்கும் வீடு கட்டும் பிரச்சனை சம்மந்தமாக தகராறு ஏற்பட்டு அவர் தற்கொலை செய்து கொண்டார் என்றால் சரியல்ல. நான் சொன்னது போல் மூன்ற நபர்கள் ஓடினார்கள் என்றாலும், அவர்களை பிடிக்க முயற்சி செய்தோம் என்று வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. அவர் உண்மையாக இருந்திருந்தால் அவர் ஊர் மக்கள் மூலம் பிடிக்க முயற்சிக்கலாம் என்றாலும், அவ்வாறு எதிரிகளுக்கும், இந்த வழக்கிற்கு எந்த

வித சம்மந்தமும் இல்லை என்றால் சரியல்ல. இறந்த நபர் என்னுடைய மகன் என்பதால் போலிசார் எழுதிக்கொடுத்த புகாரில் நான் கையொப்பம் இட்டு, பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

Taken to my dictation and corrected by me in open court read over to the witness and admitted by him as correct.

S TASNEEM

Digitally signed by S TASNEEM
Date: 2025.10.16 17:05:02 +0530

I Additional District & Sessions Judge,
Tiruvallur.